மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.</u>61/2020

2026ம் ஆண்டு பிப்ரவரி 02ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தனலட்சுமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>02.02.2026 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கின் வாதிகள் ஆன காசிநாதன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் புல எண்கள் எனக்கு தெரியுமா என்றால் க.ச.எண்.1204 மற்றும் ரீ.ச.எண்.473. தாவா சொத்தின் கதவு எண்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் கதவு எண்.600 என்று ஆரம்பிக்கும். தாவா சொத்தில் எத்தனை கதவு எண்கள் கொண்ட கட்டிடங்கள் உள்ளது என்றால் 11 கதவு எண்கள் கொண்ட கட்டிடங்கள் உள்ளது.

2. மேற்படி கட்டிடங்கள் எப்போது கட்டப்பட்டது என்றால் 1947 இல் கட்டப்பட்டது. தாவா சொத்துக்களுக்கான மொத்த விஸ்திரணங்களும் அதன் நான்கு புற எல்லைகளும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் நீளம் 132 அடி இருக்கும். அகலம் 120 அடி இருக்கலாம். தாவா சொத்தில் எத்தனை மின் இணைப்புகள் உள்ளது

என்றால் மூன்று மின் இணைப்புகள் உள்ளது மூன்று இணைப்புகளும் எனது தகப்பனார் பெயரில் உள்ளதா என்றால் 2,8,9 என்ற மின் இணைப்பு என் தாத்தா கணபதி பண்டாரம் என்பவர் பெயரில் உள்ளது 929 மற்றும் 633 ஆகிய மின் இணைப்புகள் எனது அப்பா சச்சிதானந்தம் என்பவர் பெயரில் உள்ளது.

3. தாவா சொத்துக்கள் ஆன 11 வீடுகளுக்கான கதவு எண்களுக்கான ரசீதுகள் யார் பெயரில் உள்ளது என்றால் என் தாயார் விஜயலட்சுமி பெயரில் உள்ளது. எங்களுக்கு எவ்வளவு சொத்துக்கள் பாத்தியம் என்று நான் சொல்கிறேன் என்றால் 2.47 சென்ட் பாத்தியம். குடிநீர் இணைப்பு எண் 282 அது என் தாயார் பெயரில் உள்ளது. நான் சொல்லும் சொத்துக்கள் அனைத்தும் என் தாத்தா கணபதி பண்டாரம் என்பவருக்கு 1927 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியம் என்றால் சரிதான். என் தாத்தா கணபதி பண்டாரம் என்பவர் 1975 ஆம் ஆண்டு காலமாகிவிட்டார் என்றால் இல்லை 1974 இல் காலமானார்.

4. என் தாத்தா கணபதி பண்டாரம் என்பவர் கல்வி அறிவு கொண்டவர் மற்றும் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்யும் நபர் என்றால் சரிதான். அவர் மாவட்ட அளவையாராக 1927 இல் பணிபுரிந்தார். பத்மாவதி என்பவர் எனது அத்தை. என் தகப்பனார் உயிரோடு இருந்த காலத்தில் பத்மாவதி என்பவர் என் தகப்பனார் மீது வழக்கு தாக்கல் செய்து பத்மாவதி வகையறாவிற்கும் என் தகப்பனார் வகையறாவிற்கும் இடையே வழக்கு நடந்தது என்றால் அது எனக்கு தெரியாது. லட்சுமி என்பவர் என் தகப்பனாரின் சகோதரரின் மனைவியாவார்.

5. என் தகப்பனாரின் சகோதரர் பெயர் நீலமேகம் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கும் பத்மாவதி ஆகியோர்களுக்கு இடையே

நடைபெற்ற அசல் வழக்கு எண் 57/1992 வழக்கில் மேற்படி என் தகப்பனாரின் சகோதரரின் மனைவியான லட்சுமி என்பவரும் ஒரு தரப்பினராக இருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. பத்மாவதி என்பவர் தாக்கல் செய்த மேற்படி வழக்கை பொறுத்து என் தகப்பனாரே அதை பார்த்துக் கொண்டார் நாங்கள் யாரும் செல்லவில்லை என்றால் என் தகப்பனாருக்கே அந்த வழக்கு போட்ட விபரம் தெரியாது.

6. மேற்படி வழக்கானது 1927 ல் எங்களது தாத்தா கணபதி பண்டாரம் என்பவர் கிரையம் பெற்ற சொத்துக்களை பொறுத்து என் சித்தப்பா மனைவியான லட்சுமி என்பவருக்கு உயில் எழுதி வைத்துவிட்டார் என்பது சம்பந்தமாக தான் மேற்படி வழக்கு நடந்தது என்றால் அது பொய் தவறானது. அந்த வழக்கு தாராபுரம், சார்பு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு அதை பொருத்த மேல் முறையீடு ஈரோடு கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.164/2002 ஆக நடைபெற்றது என்றால் அது தெரியாது.

7. அந்த மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டதால் அதை பொருத்து இரண்டாம் மேல்முறையீட்டை மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாம் மேல்முறையீட்டு எண்.1159/2005 என்ற வழக்காக பத்மாவதி தொடர்ந்து நடத்தினார் என்றால் அது தெரியாத மன்றத்தில் சமரசம் செய்யப்பட்டதன் அடிப்படையில் திரும்ப பெற்றுக் கொண்டதாக குறிப்புகள் செய்யப்பட்டு வழக்கு முடிக்கப்பட்டது என்றால் அது பொய். நீலமேகம் மற்றும் லட்சுமி தம்பதியினருக்கு டாக்டர் தேவகி என்ற ஒரு மகள் உள்ளார் என்றால் அது எங்களுக்கு தெரியாது.

8. 5.08.2016 தேதியில் எங்களது சொத்துக்களை பொறுத்து முழுவதும் தேவகி என்பவருக்கு பாத்தியப்படுத்தி லட்சுமி செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் அது எங்களுக்கு தெரியாது. எங்களது தாத்தா கணபதி பண்டாரம் என்பவர் ஒரு வெங்கட்ராம செட்டியார் என்பவரிடமிருந்து தான் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். எங்கள் சொத்துக்கு வடபுற பகுதியில் பழனிச்சாமி செட்டியார் வீடு முன் வாசல் மற்றும் பிறவடை உள்ளது என்றால் இல்லை எங்கள் சொத்திற்கு வடபுற பகுதிகளும் நாங்கள் தான் உள்ளோம். எங்கள் சொத்துக்கு கிழபுறம் காங்கேயம் திருப்பூர் ரோடு உள்ளது என்றால் சரிதான்.

9. தென்புறத்தில் கிருஷ்ணசாமி முதலியார் என்பவருக்கு ஆதியில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். மேல்புறம் தென்வடல் தடம் உள்ளது என்றால் ஆமாம். கிருஷ்ணசாமி முதலியார் வகையறாவிடமிருந்து தான் காசிநாதன் செட்டியார் வகையறா ஒரு சொத்தை கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் அது பொய் என் தாத்தா கணபதி பண்டாரம் அவர்கள் கிரயம் பெற்ற சொத்தானது 5100 சதுர அடிகள் என்று சொன்னால் இன்னும் அதிகம் இருக்கும்.

10. என் தாத்தா கணபதி பண்டாரம் என்பவர் என் சித்தப்பா மனைவி லட்சுமி என்பவருக்கு தாவா சொத்துக்களை பொறுத்து உயில் ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு அந்த உயில் ஆவணமானது தாராபுரம் சார்பு நீதிமன்றம் அசல் வழக்கு எண் 57/1992 மற்றும் ஈரோடு முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு வழக்கு எண் 164/2002 மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு எண்.1159/2005 ஆகிய

வழக்குகளில் உறுதி செய்யப்பட்டு லட்சுமி என்பவருக்கு எங்கள் சொத்துக்கள் முழுவதும் பாத்தியப்பட்டு விட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வீதம் எங்கள் சொத்துக்களை உரிமையடைந்த லட்சுமி தனது மகளான தேவகி என்பவருக்கு அந்த சொத்துக்களை தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்திய படுத்தி அவர்கள்தான் சுவாதீனத்திலிருந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் அது பொய்.

11. எங்கள் தாத்தா கணபதி பண்டாரம் என்பவர் கிரையம் பெற்ற சொத்துக்களை தவிர வேறு எந்த சொத்துக்களை பொருத்தும் எங்களுக்கு உரிமைகள் இல்லை என்று சொன்னால் எங்கள் தாத்தா சொத்துக்களை பொறுத்துதான் நாங்கள் உரிமை கேட்கிறோம். எங்களுக்கு உரிமை பெற்ற உரிமை ஆவணங்கள் எதையும் நாங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எங்களுக்கும், எங்கள் சொத்தில் தென்புறத்தில் கடை கட்டி உள்ள வாதிகள் வகையறாவிற்கும் தான் தற்போது பிரச்சனை என்றால் சரிதான்.

12. எங்கள் தாத்தா கிரயம் பெற்ற சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியம் என்று நாங்கள் வழக்கு போட்டு எங்கள் உரிமைக்காக போராடி வருகிறோம் என்று சொன்னால் 1971 இல் எங்களுக்கு உரிமையானது என்று தீர்ப்பாகிவிட்டது. அந்த தீர்ப்பை நாங்கள் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளோமா என்றால் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம். ரீ.ச.எண்.476/26 பூமியில் எங்களுக்கு ஏதேனும் உரிமைகள் உள்ளதா என்றால் இல்லை. அந்த பூமியை பொறுத்து நாங்கள் உரிமைகள் ஏதேனும் கேட்கிறோமா

என்றால் இல்லை. வாதிகள் சொத்தைப் பொறுத்து வாதிகள் இருவரும் பாகப்பிரிவினை செய்து கொண்ட வா.சா.ஆ.3 ஆவணத்தை பொறுத்து எனக்கு ஆட்சேபனைகள் ஏதேனும் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் வகையறா சொத்துக்களை பொறுத்து நான் பட்டா மற்றும் உரிமை ஆவணங்கள் ஏதேனும் பார்த்து உள்ளேனா என்றால் இல்லை.

13. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ஆன வீட்டு வரி ரசீது ஆனது என் தாத்தா கிரையம் பெற்ற சொத்துக்களில் உள்ள ஒரு வீட்டிற்க்கான ரசீது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ரசீது ஆனது என் தாத்தா கிரயம் பெற்ற சொத்துகளில் உள்ள ஒரு வீட்டிற்க்கான மின் கட்டண ரசீது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் யாரால் எப்போது எடுக்கப்பட்டது என்றால் என்னால் தான் அந்த புகைப்படங்கள் எடுக்கப்பட்டது. எதை வைத்து மேற்படி புகைப்படங்களை எடுத்தேன் என்றால் டச்சிங் ஃபோனை வைத்து எடுத்தேன்.

14. மேற்படி புகைப்படங்களில் சீதாலட்சுமி நான் மற்றும் அமுதா ஆகியோர் கேட்டிற்கு வெளியே முன்பகுதியில் நின்று புகைப்படங்கள் எடுத்து உள்ளோம் என்றால் ஆமாம். அந்த செல்போனை நான் தற்போது என் வசம் வைத்துள்ளேன் என்றால் ஆமாம். தாவா சொத்துக்களில் எங்கள் சொத்து உள்ளதாக நான் சொல்வதைப் பொறுத்து எங்கள் சொத்தை நாங்கள் அளவீடு செய்து பார்த்தோமா என்றால் சர்வேயர் வைத்து அளவீடு செய்தோம் அவர் அளவீடு செய்து எங்கள் சொத்து வாதிகள் சொத்தில் உள்ளதாக சொல்லி சென்றார்.

15. அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் அவர் ஆவணங்கள் எதுவும் கொடுக்கவில்லை. வாதிகள் எங்கள் சொத்தை இடையூறு செய்வதை பொருத்து நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் காவல் கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், கோட்டாட்சியர் எல்லோரிடமும் புகார் கொடுத்தேன் அவர்கள் கண்டு கொள்ளவில்லை. எங்கள் சொத்தை இடஞ்சல் செய்வது சம்பந்தமாக நாங்கள் வாதிகள் மீது எங்கள் சொத்துக்களை விவரித்து ஏதாவது வழக்கு தாக்கல் செய்தோமா என்றால் வழக்கு எதுவும் போடவில்லை.

16. போலீசார் புகார் எடுக்காதது குறித்து நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு போட்டோம் என்றால் இல்லை. வழக்கு வாதிகள் எங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து எங்களை அழைத்து விசாரித்தார்கள் என்றால் இல்லை. எங்கள் தாத்தா மூலம் நாங்கள் உரிமை அடைந்த எங்கள் சொத்துக்களில் நாங்கள் சுவாதீனத்தில் இருப்பதை காட்டுவதற்கு நாங்கள் ஏதாவது ஆவணங்களை தாக்கல் செய்து உள்ளோமா என்றால் அவற்றை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம். காசிநாதன் செட்டியார் வகையறா தாவா சொத்துக்களில் உர வியாபாரம் செய்து வந்தார்கள் என்றால் அது எங்களுக்கு தெரியாது. தாவா சொத்தை பொருத்த வாதிகளின் மின் இணைப்பு மற்றும் கதவு எண்களில் நாங்கள் ஏதேனும் உரிமை கோருகிறோமா என்றால் அது இருப்பதே எங்களுக்கு தெரியாது.

17. வழக்கு சொத்துக்கள் கிருஷ்ணசாமி முதலியார் வகையறாவிடமிருந்து 1934 இல் வாதிகளின் தாத்தா காசிநாதன் செட்டியார் என்பவரின் தகப்பனார் அண்ணாமலை செட்டியார் என்பவர்

கிரையம் பெற்றார் என்றால் அது எனக்கு தெரியாது அது பொய். கிரயம் பெற்று அவர்கள் அதில் கிழக்கே பார்த்து கட்டிடம் கட்டி அதில் ஜீவனம் செய்து வந்தார்கள் என்றால் அது பொய். அவர் இறந்ததற்கு பின்பு காசிநாதன் செட்டியார் அந்த சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார் என்றால் அது பொய்.

18. பின்பு சிவாச்சலம் செட்டியார் என்பவர் வாரிசு அடிப்படையில் உரிமை அடைந்து அனுபவம் செய்து வந்தார் என்றால் அது பொய். சிவாச்சலம் செட்டியார் என்பவருக்கு பின்பு வாதிகள் அந்த சொத்துக்களை உரிமையடைந்து அதில் வியாபாரம் செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அது பொய். வழக்கு சொத்துக்கள் 80 ஆண்டுகளுக்கும் மேலாக வாதிகள் வகையறாவினரின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் அது பொய். வாதிகளின் அனுபவத்தை அனுசரித்து தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகள் பெயரில் நத்தம் பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

19. வாதிகள் மேற்படி நத்தம் பட்டாவில் கண்ட விஸ்தீரன அளவுகளின் படியும், மேற்படி சொத்திற்கு வட புறமுள்ள லட்சுமி அம்மாள் சொத்திற்கு தென்புறமுள்ள பகுதிகளை அனுபவம் செய்து வருகிறார் என்றால் அது பொய். என் தாத்தா கிரயம் பெற்ற சொத்துக்களை பொறுத்து எங்களுக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்றும், மேற்படி சொத்துக்கள் தேவகி என்பவரின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றும் சொன்னால் அது பொய். என் தாத்தா கிரையம் பெற்ற சொத்துக்கள் எங்கள் தகப்பனார் காலத்திலேயே எங்கள் கைவிட்டு போய்விட்ட நிலையில் நாங்கள் வாதிகளை மிரட்டி

அவர்களது சொத்தை அடைய வேண்டி சட்டத்திற்கு புறம்பாக பிரச்சனை செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல.

20. எங்களுக்கு வழக்கு சொத்துக்களை பொருத்தும் அதன் வடபுறம் அமைந்துள்ள எங்கள் தாத்தா கிரையம் பெற்ற சொத்துக்களை பொருத்தும் எந்த உரிமையும் அனுபவமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் 06.04.2019 தேதியில் தாவா சொத்துக்களில் அத்துமீறி நுழைந்து தாவா சொத்தில் உள்ள வாதிகளின் கடைக்கு சென்று நாங்கள் பிரச்சனை செய்தோம் என்று சொன்னால் அது பொய். அது சம்பந்தமாக வாதிகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து காவல் நிலையத்தில் எங்களை அழைத்து விசாரித்து எங்களுக்கு அறிவுரை வழங்கியும் நாங்கள் அதைக் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

21. திரும்பத் திரும்ப நாங்கள் பிரச்சனைகள் செய்து வாதிகளுக்கு மன உளைச்சல் செய்ததால் தான் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகளாகிய எங்களுக்கு வழக்கு சொத்துக்களை பொருத்து அதன் அருகில் அமைந்துள்ள சொத்துக்களை பொருத்தோ எவ்வித உரிமையும் அனுபவமும் எந்த காலத்திலும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கூட்டமாக சேர்ந்து கொண்டு வாதிகளை மிரட்டி வாதிகளுக்கு இடைஞ்சல் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. வாதிகளின் உரிமை மூலத்தையோ, சுவாதீனத்தையோ மறுத்து கூற எங்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் வாதிகள் கோரியுள்ள படி தீர்ப்பாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.02 18:55:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்